# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 22   இதழ் – 11   நவம்பர் 2009


## கிறிஸ்துவின் சபை

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

# "துருவின் சாட்சி"

(Rust as a witness)

"கர்த்தருக்குக் கொடுத்தல்" பற்றி சத்தமாகவும், உபதேச சுத்தமாகவும் பேசும் 120 பக்கங்கள் கொண்ட புதிய நூலை அழகாக அச்சிட்டு சமீபத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

பரலோக பாக்கியத்தை மனமார வாஞ்சிக்கும், ஒவ்வொரு கிறிஸ்தவரின் கையிலும் இருக்க வேண்டிய மிக அவசியமான நூல்.

இப்புத்தகம் வேண்டுவோர் தபால் செலவுக்கு ரூ. 50/- மணியார்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

— *ஆசிரியர்.*

## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. உங்கள் வலைகளைப் போடுங்கள் ........ 24
7. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 26
8. ஏலியின் குமாரர்களிடமிருந்து பாடங்கள் ........ 29
9. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருக்கிறார் ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 NOVEMBER - 2009 Issue - 11


ஆசிரியர் உரை

## "....அந்த மனிதன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்"

சர்வ வல்லமையுள்ள பரலோகத்தின் தேவன், தம்முடைய வார்த்தையின் வல்லமையால் உண்டாக்கின பூமி உருண்டையின் எத்திக்கிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனம், அவர்கள் அறிந்த மொழிகளில் எண்ணிலடங்கா சொற்றொடர்களை தங்கள் பேச்சுக்காகவும், எழுத்துக்காகவும் அன்றாடம் பயன்படுத்து கின்றனர். இப்படி எல்லோராலும் எல்லாக் காலத்திலும் பயன் படுத்தப்படும் எல்லா சொற்றொடர்களுக்கும் சரிசமமான முக்கியத்துவம் கிடைத்துவிடுவதில்லை. ஏதோ ஒரு கால கட்டத்தில், யாரோ ஒருவரால் வெளிப்படுத்தப்படும் ஒரு சொற் றொடர் மிகவும் பிரபலமடைந்து, காலத்தால் அழியாமல், தொடர்ந்து வாழும் மக்கள் மனதில் பதிந்து பாதிப்பை ஏற்படுத் தும். இப்படிப் பதிந்து பாதிப்பை ஏற்படுத்தும் சொற்றொடர்க ளுக்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும். ஒன்று, அச்சொற் றொடர் மிக ஆழமான பொருளை உடையதாக இருக்க வேண்டும். மற்றொன்று, அப்படிப்பட்ட சொற்றொடர், மிகவும் சிறப்பான தகுதி கொண்ட ஒருவரிடமிருந்து வந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட இவ்விரண்டின் அடிப்படையில் தான், ஒரு சொற்றொடர் காலம் காலமாக மனித இனத்தால் அறியப் பட்டு, அநேகரின் கவனத்துக்கு உரியதாக மாறும். இக்கருத்து உங்களுக்கு ஓரளவுக்காகிலும் உடன்பாடாதானதாகவே இருக் கும் என்று நம்புகிறேன்.

இந்த அளவுகோலின்படி, நமது தலைப்புக்கான, " .... அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக் கும் " என்னும் இச்சொற்றொடர், இதை வெளிப்படுத்தியவரின் தெய்வீகத் தன்மையாலும், இது தரும் நித்தியம் சம்பந்தப்பட்ட அர்த்தம் மிகுந்த பொருளாலும் மிகவும் பிரபலமாகி கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மிகப் பெரும்பாலான மனித சமுதாயத்தால் அறியப்பட்டிருக்கிறது. இச்சொற்றொடரை வெளிப்படுத்தின இயேசுவானவர், தேவ குமாரனாக இருக்கிற படியால், சரியான முகாந்திரமில்லாமல், மனிதர்களாகிய நம்மைப் போன்று வெளிப்படுத்தியிருக்கமாட்டார். ஆம், இச்சொற்றொடருக்குப் பலமான காரணம் இருந்திருக்க வேண்டும்.

சரி, இச்சொற்றொடரை மையமாக வைத்து நாம் இம்மாதம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள விரும்புகிறபடியால், உலக இரட்சகர் இயேசுவானவர் எப்பொழுது இப்படிச் சொன்னார், யாரைப் பற்றி இப்படி சொன்னார், ஏன் இப்படிச் சொன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணி பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

பாழுலகைப் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்கும்படி யாக பரலோக மேன்மையைத் துறந்து இப்பூமிக்கு வந்த இயேசு வானவர் கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்தார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அப்படி வந்த இயேசு ஆண்டவரின் பூமிக்குரிய ஊழிய நாட்கள் நிறைவேறும்படியான வேளை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் அது. அப்பொழுது எட்டு நாட்கள் கொண்டாடப்படும் பஸ்கா கொண்டாட்டங்களின் முதல் நாளும் நெருங்கியது. அதைக் கைக்கொள்ள இயேசு கொடுத்த கட்டளையின்படி, பேதுருவும், யோவானும் பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு முன்னதாகப் போய், இயேசு தன் சீடர்களோடு பஸ்கா விருந்தை கடைப்பிடிக்கும்படி யான ஏற்பாட்டை செய்தனர். (மத். 26:17-19). பஸ்கா விருந்து ஆரம்பமாகும் முதல் நாளின் சாயங்கால வேளையில், இயேசு சீடர்களோடு பந்தியிருந்தார் (26:20).

நினைவு கூருதலோடும், நன்றிகளோடும், மகிழ்ச்சியோடும் புசிக்க வேண்டிய பஸ்கா விருந்து, இயேசு வெளிப்படுத்தின ஓர் அதிர்ச்சி உண்மையினாலே வருத்தத்தின் அப்பமாகவும், சஞ்சலத்தின் சாப்பாடாகவும் மாறியது. ஆம், "....உங்களி லொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் " என்ற ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். எப்படியிருந்திருக்கும் சீடர் களுக்கு? வேறு யாராவது இப்படிச் சொல்லியிருந்தால், அதை அப்படியே ஒதுக்கியிருக்க முடியும் அல்லது ஒருவேளை இயேசு ஆண்டவரே கூட, வெளியில் இருக்கும் ஒருவன் இப்படிச்

செய்யப்போகிறான் என்று சொல்லியிருந்தால் அதுகூட ஒரு மாதிரியாக சீரணிக்கக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால், தனக்கு முன்பாக அமர்ந்திருக்கும் 12 பேரில் ஒருவன் என்று சொன்னதோடு, அதை " மெய்யாகவே " சொல்லுகிறேன் என்று வேறு அழுத்தம் கொடுத்துள்ளார். (26:21).

பேரிடியாக விழுந்த இச்சொற்றொடரால், விருந்து வேளை துக்க வேளையாகவும், கொண்டாட்ட வேளை திண்டாட்ட வேளையாகவும் மாறியது. என்ன செய்வதென்று தெரியாமல் ஆளாளுக்கு, " ஆண்டவரே, நானோ? நானோ? என்று கேட்கத் தொடங்கினார்கள். அங்கே, அவர்களால், இப்படிக் கேட்டு சூட்டைத் தணிப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தெரிய வில்லை ". மற்றபடி இயேசுவே, நீர் பொய் சொல்லுகிறீர் என்றோ அல்லது நீர் சொல்லுவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றோ சொல்லவா முடியும்? அங்கே அப்பாவிகளாக அமர்ந் திருந்த சீடர்கள் பாவம். தொடர்ந்து இயேசுவானவர், " மனுஷ குமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவா திருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார் " (26:24). இயேசுவின் இந்தக் கூற்று அப்பாவி சீடர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருந்திருக்கும்.

சரி, இங்கே எந்த மனிதன் பிறவாதிருந்தானானால் நலமா யிருக்கும் என்று இயேசு சொன்னார்? தன்னோடு கூட தாலத்தில் பங்கு பெற்ற எல்லா சீடர்களுமே பிறவாதிருந்தால் நலமாயிருக் கும் என்று சொன்னாரா? யாரைக்குறித்து இப்படிச் சொன்னார்? ஒரு பெரிய சதித்திட்டத்தை மனதிலே வைத்து செயல்படுத்திக் கொண்டு பசப்பு வார்த்தைகளால் தன்னை முழு முட்டாளாக்க முயன்ற துரோகியைக் குறித்து தான் இப்படிச் சொன்னார். ஏன் ஆண்டவர் இப்படிக் கடுமையாகச் சாடினார்? ஏதோ, தான் சுத்தமாக எதிர்பாராத ஒன்றை, ஒருவன் செய்யப் போகிறார் என்பதை, அப்பொழுது தான் அறிந்து அதிர்ந்து போய் இப்படி சொல்லியிருப்பாரா? அப்படியிருக்க முடியாது. ஏனெனில், "மனுஷ குமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார் ". என்று அவர் கூறியுள்ளதால் என்ன நடக்கும் என்பதை அவர் முன்னமே அறிந்து தான் இருந்தார். நேற்று, இன்று, நாளை ஆகியவை அவருடைய வல்லமையின் கீழ் அடங்கிக் கிடந்தவை தானே. ஆகவே, அது காரணமாக இருக்க முடியாது. பின்னே, என்ன தான் காரணம்?

தனிப்பட்ட மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட இயேசு வானவர், ஆழ்ந்த கருத்தோடு தான் இப்படிப் பேசியிருக்க வேண்டும். சிருஷ்டிப்பின் சிகரமாகப் படைக்கப்பட்டு என்றென் றும் தன்னோடிருக்கும்படியாக விரும்பப்பட்ட மனிதன், தேவ திட்டத்தின்படியான வாய்ப்புகளைப் புறந்தள்ளி தன்னுடைய இழி செயலால் நித்திய நரகத்தின் மகனாக மாறுகிறானே

என்பதை எண்ணி வருந்தியே இப்படிச் சொல்லியிருக்க வேண்டும். அதுவும் யூதாசை முற்று முடிய இயேசு அறிந்திருந்தபடியால் திட்டமாகச் சொல்லியுள்ளார். ஒரு கணம், யூதாசுக்குக் கிடைத்த பாக்கியத்தை எண்ணிப்பாருங்கள். ஆயிரங்களிலும், இலட்சங்களிலும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த மனிதர்களில், தன்னோடு கூட இருக்கும்படியாக இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 பேரில் ஒருவனாக இருக்கும் சிலாக்கியம். மேலும், அவருடைய வாயில் பிறந்த வல்லமை மிகுந்த வார்த்தைகளை நேரிடையாகக் கேட்கும் சிலாக்கியம். அவர் நடப்பித்த அற்புதங்களை கண்ணாரக் காணும் சிலாக்கியம். இன்னும், மூன்றரை ஆண்டுகள் அவரோடு சுற்றித் திரிந்து, உண்டு, உறங்கும்படியான சிலாக்கியம். இப்படி சிலாக்கியங்கள் பல பெற்றவனைக் குறித்து வேதாகமத்தின் விமர்சனங்களைப் பார்த்தால் தலை சுற்றுகிறது. ஆம், " துரோகி " (லூக். 6:16) "பணப்பைக்காரன் " (யோவா 13:29), " காட்டிக் கொடுக்கிறவன்" (யோவா 13:21-26), " திருடன் " (யோவா 12:6), " பேரம் பேசுகிறவன் " (மத். 26:14,15). " சாத்தானால் பிடிக்கப்பட்டவன்" (யோவா 13:27), " கேட்டின் மகன் " (யோவா 17:12), "பிசாசு " (யோவா 6:70) என்று. என்ன ஆச்சரியப்படுகிறீர்களா? ஒட்டு மொத்த வேதாகமத்திலும், தனி ஒரு மனிதன் குறித்து இவ்வளவு கடுமையான விமர்சனம் யாரைப் பற்றியும் இல்லவே இல்லை.

மூன்றரை ஆண்டுகள் இயேசு ஆண்டவரோடு கூட இருந்தும், அவருடைய உபசேதங்கள் எதுவும் அவனுடைய தலையில் ஏறினதாகவோ, மனதில் புகுந்ததாகவோ தெரியவில்லை. எப்படியெனில், பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோனின் வீட்டில் இயேசுவிடம் குட்டு வாங்கிக் கொண்டு (யோவா 12:2,8) ஏதும் உறைக்காதவனாய், இயேசுவையும், மற்ற 11 பேரையும் பெத்தானியாவில் விட்டுவிட்டு, காட்டிக் கொடுப்பதற்கான பேரம் பேச எருசலேமுக்கு வந்துவிட்டான் (மத். 26:15). பேரம் திருப்தியாக முடிந்ததும், ஒரு பாவமும் அறியாத இயேசுவைக் காட்டிக் கொடுக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான் (26:16) கூடவே இருந்து கொண்டு.

இப்படி இயேசுவுக்கு விரோதமாகச் செயல்படுவதற்கான திட்டத்தை மனதில் பதுக்கிக்கொண்டு, கடைசி பஸ்கா விருந்திலும் இயேசுவோடும், மற்ற சீடர்களோடும் சேர்ந்து கொண்டான் (26:20) எவ்வளவு கேவலமான மனிதனாக இருந்திருக்கிறான் பாருங்கள். அங்கே இயேசு, " உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் " என்றபோது, மற்ற எல்லாரும் " ஆண்டவரே, நானோ நானோ? " என்று பதறினார். அப்பொழுது ஏதுமறி யாதவனாய்க் காட்டிக் கொள்ள முயன்ற இந்தக் கயவனின் முகமூடியைக் கிழிக்கும்படியாய் " அந்த மனுஷன் பிறவாதிருந் தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் " என்று ஓங்கி ஒரு போடு போட்டார். அப்பொழுது தான் வஞ்சகத்தின் இந்த ஒட்டு மொத்த உருவம், லேசாக நெளிந்து " ரபீ, நானோ?"

என்றது. இங்கே கவனியுங்கள் மற்ற பதினொருவரும் " ஆண்டவரே, நானோ, நானோ? " என்ற போது இந்த வஞ்சகன் மாத்திரம், " ரபீ நானோ? " என்று கேட்டுள்ளான். " ஆண்டவர் " என்று சொன்னதின் மூலம் மற்ற 11 பேரும் இயேசுவைத் தங்கள் " எஜமான் " என்று ஏற்றுக் கொண்டுள்ளதை வெளிப்படுத்தினர். அத்தோடு, அவர்கள், " நானோ, நானோ " என்று இரண்டு முறை கூறியது, இயேசு சொல்வதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்த முமில்லை என்பதையும் வெளிப்படுத்தியது. ஆனால், இவன் வெறுமனே, " ரபீ நானோ " என்றது, மூன்றரை ஆண்டுகள் அவரோடிருந்தும், இயேசுவை அவன், தன் எஜமான் என்று ஏற்றுக்கொள்ளாததோடு, அன்றைக்கு இஸ்ரவேலில் இருந்த " போதகர்களில் " ஒருவராகவே எண்ணியுள்ளான் என்பதையே காட்டுகிறது.

" ரபீ, நானோ " என்ற அவனின் நடிப்புக்கு, " நீ சொன்னபடி தான் " (26:25) என்று நெத்தியடியாய் அடித்தார். அதுவும், அவனுக்கு உறைத்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், தொடர்ந்து, இராப்போஜனத்தில் பங்கு பெற்று விட்டு, சீஷர் கூட்டத்திலிருந்து நைசாக நழுவி, இயேசுவின் எதிரிகளோடு சேர்ந்து கொண்டு, கெத்சமனே தோட்டத்திற்கு வந்து, காலங்காலமாக அன்பின் சின்னமாகக் கருதப்பட்டு முத்தத்தை துரோகத்தின் சின்னமாகத் திருத்தி எழுதி, வஞ்சகத்தின் முத்தத்தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். இவனின் இந்தக் குணக்கேடுகளுக்கு " நரகாக் கினை " நிச்சயம் என்பதையும், இவன் இனி மனந்திரும்பப் போவதில்லையென்பதையும் இயேசு அறிந்து தான், " அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் " என்று சொன்னார்.

இயேசு ஆண்டவர் இப்படிச் சொன்னதற்கான காரணத்தை நாம் கிட்டப் போய்ப் பார்த்தால், ஏதோ அவன் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக அப்படிச் சொல்லாமல், என்றென்றும் தேவாதி தேவனோடும், தன்னோடும் வாழும்படியாகத் தனக்குக் கிடைத்த முத்தான வாய்ப்பை இப்படி சின்னாபின்னப்படுத்தி நித்திய நரகத்தின் மகனாக மாறி விட்டானே என்று வேதனைப் பட்டுத்தான் சொல்லியுள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

சரி, யூதாசைப் போல யாரெல்லாம் பிறவாதிருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இப்பொழுது பார்ப்போம்.

### I தேவனை எதிர்க்கிறவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும்

" அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும்" என்ற சொற்றொடர் நமக்குத் தரும் முதல் பாடம், தேவனை எதிர்க்கிறவர்கள் இப்பூமியில் பிறவாதிருந்திருந்தால் நலமா யிருக்கும் என்பது.

மறுபடியும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், இயேசு ஆண்டவர் யூதாஸ் ஸ்காரியோத்தை கடுமையான வார்த்தைகளால் அர்ச்சித்தது, அவன் செய்த துரோகத்திற்காக மாத்திரமல்ல. மாறாக, அவனின் துரோகமும், இழி செயல்களும் அவனை நித்திய நரகத்தின் மகனாக மாற்றிவிட்டதே என்ற ஆதங்கத்தால் தான். அப்படியானால், இயேசுவின் கூற்றுப்படி, யாரெல்லாம் நரகாக்கினைக்கு ஏதுவான வாழ்க்கை வாழ்கிறார்களோ அவர்களனைவருமே பிறவாதிருந்திருந்தால் நலமாகவே இருந்திருக்கும்.

இந்த வரிசையில், கண்டிப்பாக தேவனை நம்பாத நாத்திகர்களும், தேவதிட்டத்தை எதிர்க்கிற ஆத்திகர்களும் வந்து சேருகிறார்கள். தேவன் இல்லையென்று எந்த ஒரு மனிதனும் நல்மனசாட்சியோடு சொல்ல முடியாது. அப்போஸ்தலன் பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, " தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை" (ரோம 1:19,20) என்கிறார்.

தேவன் இல்லையென்று யாரும் கூறமுடியாது என்பதை இப்படி தேவனுடைய வார்த்தை திட்டமாகக் கூறியும், தேவன் இல்லையென்று சொல்லுகிறவர்களை வேத வசனங்கள், "மதிகெட்டவன் " என்று கூறுகிறது, " தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் " என்று. (சங். 14:1; 53:1) அப்படிப்பட்டவர்களைப் பவுலடியார், " அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியகாரர்களாயிருக்கிறார்கள் என்று கூறுகிறார் (ரோம 1:22) இவர்கள் அவிசுவாசிகளாயிருந்து, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைபவர்கள் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார்கள். (வெளி. 21:8)

அடுத்து, நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம் அல்லது நம்புகிறோம் என்று சொல்லிக்கொண்டு அவருடைய திட்டத்தை எதிர்ப்பவர்கள். இப்படிப்பட்டவர்களை வேதாகமம், " கிறிஸ்துவின் சிலுவைக்குப்பகைஞர் " (பிலி. 3:18) என்று கூறுகிறது. கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர் என்பதின் பொருள், கிறிஸ்துவை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்த தேவனுக்குப் பகைவர்கள். இன்னும், சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் சபையை சாம்பாதித்த கிறிஸ்துவுக்குப் பகைஞர்கள், சிலுவையின் நாயகராகிய இயேசு வின் வாக்குப்படி அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்குப் பகைவர்கள். இப்படி தேவனை நம்பாதவர்களும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக

இருப்பவர்களும் நரகாக்கினையின் மக்களே. ஆகவே, இப்படிப் பட்டவர்கள் பிறவாதிருந்தால் நலமாகவே இருந்திருக்கும். ஏனெனில், நரகத்தின் வேதனைகளுக்குத் தப்பியிருக்கலாம்.

அருமையானவர்களே, இப்பூமியில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் யாரும் தேவனை நம்பாதவர்களாகவோ, தேவன் கொடுத்திருக்கும் இரட்சிப்பின் திட்டத்தையோ அல்லது தேவ ஞானத்தின்படியான சபையையோ ஏதாவது ஒரு வகையில் எதிர்க்கிறவர்களாகவோ இராமல், தேவத்திட்டத்திற்கும், கிறிஸ்துவின் சிலுவை நோக்கத்திற்கும், பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளுக்கும் நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுத்து வாழ்வோமாக!.

**II ஆன்மீக வேடதாரிகள் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும்.**

" அந்த மனுஷன் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும்" என்ற சொற்றொடர் நமக்குத் தரும் அடுத்த பாடம், ஆன்மீக காரியங்களில் வேஷம் போடுகிறவர்கள் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்பது.

யூதாஸ் ஸ்காரியோத்தை ஆண்டவர் இப்படித் தீர்த்ததற்கான காரணங்களில் ஒன்றாக அவனுடைய பக்தி வேஷத்தை நாம் கூறலாம். பக்தியைப் பொறுத்தளவில் இவனை மிகச் சிறந்த ஒரு நடிப்புக்காரன் என்று கூறலாம். ஆம், மூன்றரை ஆண்டுகள் ஆண்டவரோடு கூட இருந்தும் கடைசி வரை அவரை ஆண்டவரென்று ஏற்றுக்கொள்ளாமல், ஒரு போதகராக மாத்திரம் எண்ணிக் கொண்டு, பணப்பையைச் சுமந்தவனாக கூடவே சுற்றித் திரிந்திருக்கிறான். இருதயமே இல்லாத ஒரு பிறவி!.

ஆன்மீக வாழ்க்கையில் வேடமணிந்து வாழ்பவர்களுக்கு எந்தக் காலத்திலும் குறைவில்லை என்றே தெரிகிறது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த வேதபாரகர்களும், பரிசேயர்களும் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இவர்களை அன்றைய சமுதாயத்திற்கு அடையாளம் காட்டுவதற்கென்று இயேசு கணிசமான நேரத்தை ஒதுக்கியுள்ளார். " மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ " (மத். 23:13,14, 15,23) என்றும், " குருடரான வழிகாட்டிகளே உங்களுக்கு ஐயோ" (23:16) என்றும், " மதிகேடரே, குருடரே " என்றும் (23:19) "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்" (23:27) என்றும், இன்னும், " சர்ப்பங்களே, விரியன்பாம்பு குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?" (23:33) என்றும் விமர்சித்துள்ளார். இங்கே நன்றாக கவனியுங்கள். மாய்மாலம் ஒருவனை நரகாக்கினைக்கு ஏதுவானவனாக மாற்றுகிறது.

மாய்மாலம் என்பது போலியான தோற்றம். அதாவது, தன்னிடம் இல்லாததை இருப்பது போல காட்டுவது. இயேசுவானவர் இப்படிப்பட்ட நிலையைச் சாடியிருக்கிறார் என்பதை விட சபித்திருக்கிறார் என்று சொல்வதுதான் சரி. இதற்கு சரியான உதாரணம், கனிகள் இல்லாமல் இலைகளை மாத்திரம் கொண்

டிருந்த அத்திமரம் (மத். 21:19,20). இயேசு போதித்த கிறிஸ்தவம் அதன் மாண்பையும், பொலிவையும் இழந்ததற்கு காரணம் கிறிஸ்தவத்தை பீடித்துக்கொண்ட போலித்தன்மை தான். இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்கத் தேவையில்லை. ஏனெனில், ஆதியிலிருந்து கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் வேஷமற்ற கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ்ந்திருந்தால், இன்றைக்கு கிறிஸ்தவம் எங்கேயோ போயிருந்திருக்கும். அது தன் தனித்தனமையை இழந்து, இருக்கிற மதங்களில் இதுவும் ஒன்று என்ற நிலைக்கு தாழ்ந்திருக்காது.

நாங்களும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற நம்முடைய சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும், போலித்தன்மைக் காணப்படுகிறதா அல்லது யதார்த்தத்தை மாத்திரம் நாம் பிரதிபலிக்கிறவர்களாக உள்ளோமா என்று சிந்திக்க வேண்டியவர்களாயுள்ளோம். ஆன்மீக காரியங்களில் உண்மையை சாமார்த்தியமாக மறைத்து, போலித் தோற்றத்தை வெளிப்படுத்துவதை தேவன் அடியோடு வெறுக்கிறார். ஆதித் திருச்சபையின் அங்கமாக இருந்த அனனியா, சப்பீராள் அதற்கு மிகச் சிறந்த உதாரணம் (அப். 5:1-10). காணியாட்சியை விற்றுக் கொடுக்கும்படி அவர்களை யாரும் கட்டாயம் பண்ணவில்லை. அவர்களாகவே முன் வந்து அதைச் செய்தனர். ஆனால், செய்ததை போலியாகச் செய்தனர். விளைவு, இரண்டு பேரும், தேவனால் அடிக்கப்பட்டுச் செத்தார்கள். யூதாஸ் ஸ்காரியோத்து மாத்திரமல்ல இவர்களும் பிறவாதிருந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும். ஏனெனில், அவர்கள் மரணத்தைத் தாண்டி போய்ச் சேர்ந்த இடம் அப்படிப்பட்டது.

ஆகையால், பரத்துக்கடுத்த காரியங்களில் நாம் ஒரு போதும் போலியான வாழ்க்கைக்கு துணிந்து விடாமல் நம்முடைய வாழ்க்கையின் சகல அம்சத்திலும் தேவ சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றுபவர்களாகவும், தேவத்திட்டத்திற்கு ஒப்புக் கொடுப்பவர்களாகவும் இருப்போம்.

**III கிறிஸ்துவை மறுதலிப்பவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும்**

" அந்த மனுஷன் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும் " என்ற சொற்றொடர் நமக்குத் தரும் இன்னுமொரு பாடம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மறுதலிப்பவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்கும் என்பது.

இதற்கு ஆதாரமாக, பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு ஆவியானவர் பேசியுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள். "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கின்ற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை, முன் நிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்க

ளுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் *அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்* " (பேது 2:20,21).

ஒருவர் நீதியின் மார்க்கத்தை அறிந்து, பரிசுத்த கற்பனைகளுக்கு தன்னை ஒப்புக் கொடுக்கும் போது பிதாவாகிய தேவனை " அப்பா, பிதாவே " என்று கூப்பிடும் புத்திர சுவீகாரத்தை பெறுகிறார் (ரோம 8:15). மேலும், அவர் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாகிறார் (ரோமர் 8:17). அத்தோடு, " புதிய சிருஷ்டி " (II கொரி 5:17) கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கம் (I கொரி 12:20), தேவனுடைய ராஜ்ஜியத்தின் குடிமகன் (கொலோ 1:13-14) புதிய ஐக்கியத்தின் அனுபவம் (Iயோவான் 1:3,7), மகத்தான வாசஸ்தலத்திற்கான நம்பிக்கை (யோவா 14:1-3) போன்ற பல பாக்கியங்கள் கிடைக்கிறது. யாருக்கு இவைகளெல்லாம் கிடைக்கிறது? ஒரு காலத்தில் உலகத்தின் அசுத்தங்களுக்குள்ளாக வாழ்ந்தவர்களுக்கு, இது எவ்வளவு பெரிய சிலாக்கியம் பாருங்கள்!.

இவ்வளவு சிலாக்கியத்திற்கு சொந்தக்காரர்களாக மாறினவர்கள், மறுபடியும் பழைய நிலைக்கு, அதாவது, பரிசுத்தக் கற்பனைகளை மறுதலிக்கும் நிலைக்கு, இன்னும் அதாவது, கிறிஸ்துவையும், அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையையும் மறுதலிக்கும் நிலைக்கு போவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருந்திருக்கும் என்று ஆவியானவர் கூறுகிறார். இதைத்தான் இயேசு ஆண்டவர், இன்னும் ஒரு படி மேலே சென்று, அப்படிப்பட்டவர்கள் பிறவாதிருந்தால் நலமாயிருக்குமென்று கூறியுள்ளார்.

அப்படியானால் இதை வாசிக்கும் அருமையானவர்களே, முதலாவது, நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு சொல்லும் நீதியின் மார்க்கத்தை, கிறிஸ்துவின் உபதேசப்படி அறிந்து, அந்த பரிசுத்த கற்பனைகளின்படி விசுவாசித்து (மாற் 16:16), மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) கர்த்தருடைய சபையின் அங்கமாகிவிட்டோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அடுத்து, அந்த பரிசுத்த கற்பனைகளை விட்டு ஒருபோதும் விலகாமல் மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும் (வெளி. 2:10) ஒருவேளை, அப்படி நிலைத்திராமல், மறுதலிக்கிறவர்களாகி நித்திய நரகத்திற்குச் செல்வதைப் பார்க்கிலும், நாம் பிறவாமல் இருந்திருந்தால் நலமாகவே இருந்திருக்கும் உண்மை தானே.

ஆக, மேலே நாம் பார்த்த காரியங்களின்படி, நாம் இப்பூமியில் பிறந்தது நலமானதாயிருக்கும்படியான ஓர் அர்த்தமுள்ள பக்தி வாழ்க்கையை நடத்த பரலோகத்தின் தேவன் நமக்குத் தந்துள்ள வாய்ப்புகளை செம்மையாய் பயன்படுத்துவோமாக! ஆமென்!!

**S. ராஜநாயகம்**

# கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி?

இப்பொழுது, கொள்கைச் சுத்தம் என்று நாம் எதைச் சொல்லுகிறோம். அது ஏன் அவ்வளவு முக்கியமானது? நாங்கள் இங்கே ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கும், பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருப்பதற்கும் அவசியமான கொள்கை உபதேசம் மற்றும் சத்தியம் போதிக்கப்படுதல் போன்றவை பற்றி பேசுகிறோம்.

தேவன் பேசினார் என்பதை அறிவோம் (எபி. 1:1,2) கிறிஸ்து வார்த்தையாக உள்ளார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோவா 1:1,2) பிறகு கர்த்தருடைய வார்த்தைகளை எழுதுவதில் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களையும், மற்றவர்களையும் வழிநடத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (2 தீமோ. 3:16,17; 2பேது. 1:21) இதையே வேறுவிதமாகச் சொன்னால் கர்த்தர் நாம் அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும்படியாக, அவைகளை வேதாகமத்தின் பக்கங்களில் கொடுத்திருக்கிறார். குறிப்பாக இன்றைக்கு நமக்கு பொருந்தக் கூடியதாக உள்ள புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் கொடுத்துள்ளார்.

சபையானது, எருசலேமில், ஸ்தாபிக்கப்பட்டதற்கு பிறகு அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரிந்திருந்தார்கள் (அப். 2:42) என வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களுடைய உபதேசம் என்பது என்ன? அது கர்த்தரிடத்திலிருந்து வந்தது. சீஷர்கள் அவர்களை தொடர்ந்து பின்பற்றினர். அதாவது அவர்கள் தங்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து செய்தனர். அது என்ன? ஐக்கியமாயிருத்தல், அப்பம் பிட்குதல், ஜெபம் பண்ணுதல்.

ஆரோக்கியமான உபதேசம் பற்றி பவுல் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார். உலக காரியங்கள், ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரானது என்று சொல்லியுள்ளார் (I தீமோ. 1:10) வேறொரு சமயத்தில் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாத சமயம் வரும் என்கிறார் (II தீமோ 4:3) மூப்பர்களுடைய தகுதிகளைப் பற்றி பேசும் போது பவுல் " .... குற்றம் சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்தவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப்பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர் மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும் நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தியுள்ளவனும், எதிர் பேசிகிறவர்களை கண்டனம் பண்ணவும். வல்லவனுமாயிருக்கும்படி, தன் போதிக்கப்பட்டதற்கு ஏற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளுகிறவனுமாய்

இருக்க வேண்டும். " (தீத். 1:7-9) என்று சொல்லி உள்ளார். மீண்டுமாக "நீயோ ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவை களை பேசு. முதிர் வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர் களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர் களும், விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும், ஆரோக் கியமுள்ளவர்களாயிருக்கும்படி புத்தி சொல்லு " (தீத். 2:1,2) என்கிறார். இங்கே கவனித்தால் விசுவாசத்தின் ஆரோக்கிய முள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், விசுவாசத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்டதன் மூலம் வருகிற படியால் (ரோமர். 10:17) ஒருவன் ஆரோக்கியமான உபதேசம் அல்லது வெளியாக்கப்பட்டுள்ள தேவ சித்தத்தை கேட்க வேண்டும். மேலும் தீத்து 2 :7,8 வசனங்களில் இவ்விதம் கூறுகிறார். நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பித்து எதிரியானவன் உங்களைக் குறித்து பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத் தக்கதாக உபதேசத்திலே விகாப்பமில்லாதவனும், நல்லொழுக்க முள்ளவனும், குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத் தை பேசுகிறவனுமாயிருப்பாயாக என்று கூறுகிறார்.

இப்பொழுது மேலே பார்த்த எல்லா வசனங்களிலும் நாம் ஆரோக்கியமான உபதேசம், உண்மையுள்ள வார்த்தை, விசுவாசத்தில் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான பேச்சு போன்ற வார்த்தைகள் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிச் சொல்லுவது பரிசுத்த ஆவியானவருக்கு ஏன் அவசியமாயிருந் தது? காரணம் என்னவெனில், கர்த்தருடைய உபதேசம் முதலில் கொடுக்கப்பட்டபடியே, சுத்தமாகவும், உண்மையாகவும் காக்கப்படும்படிதான் மற்றும் கள்ளப்போதகங்களிலிருந்து காப் பாற்றப்படும்படியாகவும், ஆரோக்கியமான உபதேசம் பற்றி வலியுறுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. அப்போஸ்தலன் பவுல் மேலும் தொடர்ந்து அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும், உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கை யாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக் குப்புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியசெய்து நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சி னாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர் களாயிருக்கிறார்கள் (ரோமர். 16:17,18) என்று கூறுகிறார்.

இளம்பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு, அப்போஸ்தலன் பவுல் இப்படியாகக் கூறுகிறார். " ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் பலப்பட்டு, அநேக சாட்சி களுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர் களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி " (II தீமோ 2:2) தொடர்ந்து அவர் " நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும்

நியாயந்தீர்க்கபோகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திரு வசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு, புத்தி சொல்லு, ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதே சத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாய்ச் சேர்த்துக்கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுகதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் " வரும் என்கிறார் (II தீமோ. 4:1-4). பேதுருவும் ஒருவன் போதித்தால் தேவனு டைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப் படும்படியே செய்வீர்களாக அவருக்கே மகிமையும், வல்லமை யும், சதாகாலங்களிலும் உண்டாயிருப்ப தாக ஆமென். (I பேதுரு 4:11) என்று கூறியுள்ளார்.

மேலுள்ள வசனங்களின் பின்னணியை நாம் கவனித்தால் அவைகள் சத்தியத்தின் முக்கியத்துவத்தையும் ஆரோக்கியமான மற்றும் உண்மையான உபதேசங்களின் அவசியத்தையும் காட்டு கிறது. நீங்கள் இருக்குமிடத்தில் ஒரு பிராந்திய சபையை ஆரம் பிப்பதாக இருந்தால் அது தேவனுடைய வார்த்தைகளின் போத னையின்படிதான் செய்யப்படவேண்டுமென்று நான் உங்க ளுக்குச் சொல்லுகிறேன். தேவனுடைய முழுச்சித்தம் போதிக்கப் பட்டு அதற்குத் தங்களை கீழ்ப்படித்தினவர்களை மாத்திரம் உங்களது ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் தேவனில் விசுவாசம் கொள்ளுகிறவர்களாகவும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பினவர்களாகவும் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்களாகவும் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற்றவர்களாகவும் இருப்பர் (மாற். 16:15,16 ரோமர். 10:10, அப். 2:38). அப் போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை படித்தால் மனமாற்றப்பட்ட வர்களின் பல உதாரணங்கள் அங்கே பட்டியலிடப்பட்டிருக்கி றது. அவர்கள் எல்லோருமே இந்த உபதேச சத்தியத்திற்கு கீழ்ப் படிந்துள்ளனர். அதன் பலனாக, கர்த்தர் அவர்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக்கொண்டார். (அப். 2:47) யோவான் 3:3-5 வசனங்கள் மறுபிறப்பைக் குறித்து படம் பிடித்து காட்டுகிறது. ரோமர் 6:3,4 மற்றும் I கொரி. 12:13 வசனங்களில் ஒருவன் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, கிறிஸ்து விலும் அவருடைய சபையிலும் பிரவேசிக்கிறான் என்று போதிக்கப்படுகிறோம்.

பிறகு, பிராந்திய சபையானது இரட்சிப்பின் திட்டம் குறித்து உபதேசிக்கும். அதுமாத்திரமல்ல, ஒரே சபைதான் உண்டு என்றும், கிறிஸ்து அதைக்கட்டினார் என்றும், இயேசு அதன் தலைவர் என்றும் கிறிஸ்துவின் மீது அது கட்டப்பட்டிருக்கிறது

என்றும், கிறிஸ்து அதற்காக மரித்தார் என்றும், அவர்தான் அதன் இரட்சகர் என்றும் அந்த சபைக்காக மீண்டும் ஒருநாளில் அவர் வருவார் என்றும் சபையானது போதிக்கும். (மத். 16:15,16, எபே. 4:4-6; மத். 16:18; கொலோ 1:8; 1 கொரி. 3:11; ரோமர் 16:16; அப். 20:28; எபே. 5:23-27) இங்கே நான் கொடுத்திருக்கிற வசனங்களின் அதிகாரப்படி, மேற்சொன்ன கருத்தை வெளிப்படுத்தினேன்.

பிராந்திய சபையானது, வசனங்களின் மூலமான மாதிரியை, வாரத்தின் முதல் நாளில் கூடிப்பாடுவதற்கும், ஜெபிப்பதற்கும், வேதம் வாசிப்பதற்கும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதற்கும், கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளதின்படி அவருக்குக் கொடுப்பதற்கும் பின்பற்றும் (அப். 20:7, எபே. 5:19, தீத். 2:15, 1 கொரி. 11:23-29, 1கொரி. 16:2) பிராந்திய சபை, தன்னுடைய அங்கத்தினர்களை பரிசுத்தமாக, வேதபக்திக்கேவான வாழ்க்கை வாழ்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும் அப்போஸ்தலன் பவுல், "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக் கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபடி நமக்குப் போதிக்கிறது, அவர் நம்மை சகல அக்கிரமங்களின்று மீட்டுக்கொண்டு, தமக்கு உரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடாதிருப்பாயாக ". (தீத். 2:11-15) என்கிறார். பிராந்திய சபையானது வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே மௌனமாக இருக்கவும் வேண்டும். தேவனுடைய வார்த்தையோடு கூட்டவோ அல்லது குறைப்பதோ அல்லது மாற்று செய்வதோ இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். (வெளி. 22:18,19, கலா. 1:6-9).

கர்த்தருடைய உபதேசம் மற்றும் கொள்கைகளை சுத்தமாக காத்துக்கொள்வதற்கு உள்ள ஒரு சிறந்த வழி யாதெனில் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனுடைய வார்த்தையை வாசித்து அதில் பரீட்சையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (II தீமோ. 2:15) அப்படிச் செய்யும் போது தேவன் அவர்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை மாத்திரம் அவர்கள் தெரிந்து கொள்ளாமல் கள்ளப்போதகங்களுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். சத்தியம் தான் விடுதலையாக்கும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (யோவா. 8:32).

**J.C. CHOATE**

பெண்கள் பகுதி

# “ வீழ்ச்சியிலும் மாறாத தேவனுடைய திட்டம் ”

சிருஷ்டிப்பு முதற்கொண்டே, ஆண் தன் குடும்பத்திற்குத் தலைவனாக இருக்க வேண்டுமென்பதில் தேவன் மிகவும் திட்ட மாயிருந்தார். இருந்த போதிலும் பெண்ணினால் உண்டான மீறுத லினிமித்தம், புதிய நிபந்தனைகளும், சட்டங்களும் ஏற்படுத்தப் பட்டது.

விலக்கப்பட்ட கனியை ஏவாளும், ஆதாமும் புசித்த பிறகு, பாவம் செய்து விட்டதாக உணர்ந்தார்கள். முதல் முறையாக தேவனைக் கண்டு பயந்தார்கள். “ பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தரு டைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது அவன்; நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத் திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான். நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட் சத்தின் கனியைப் புசித்தாயோ ” என்றார்.

அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்கும் கொடுத் தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி; “ நீ இப்படிச் செய்தது என்ன என்றார்”. (ஆதி. 3:8-13) இந்த துக்கமான சோதனை நிகழ்ச்சியில், ஏவாள் தன் குடும்பத்திற்கான தலைமையை, தான் எடுத்துக் கொண்டாள். அவள் அவ்வாறு செய்வதற்கு ஆதாம் அனுமதித்து விட்டான். ஆனால், தேவன் அந்த இடத்திற்கு வந்த போது, அவர்கள் ஏற்படுத்திய அந்த தலைமை மாற்றத்திற்கு உடன்பட்டாரா? இல்லை. தேவன் ஆதாமைக் கூப்பிட்டார். பாவம் நிகழ்ந்தது பற்றி தேவனுக்குத் தெரியுமா? மேலும் யார் இந்த மீறுதல் செயலைச் செய்ய வழிகாட்டியது என்பதும் தேவனுக்குத் தெரியுமா? தேவன் எல்லாவற்றையும் அறிந்தே இருந்தார். ஆனால், ஆதாமை குடும்பத்தின் தலைவனாக அதின் நேர்த்தி யான தலைமைப் பொறுப்புடன் உண்டாக்கியிருந்தபடியால், நடந்த காரியத்திற்கு பதில் அளிக்கும்படி தேவன் அவனையே அழைத்தார்.

இச்சம்பவத்திலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது அவசியமாகிறது. *மனிதன் தன்னுடைய பங்கிலே காரியங்களை எப்படிச் செய்தாலும், தேவன் நாம் ஏற்படுத்திய ஒரு திட்டத்தைத் தானே மாற்றியதில்லை, மாற்றவுமாட்டார்.* அவர்கள் செய்த பாவத்தின் விளைவாக, புதிய கட்டளைகளும், தண்டனைகளும் சர்ப்பத்திடமும், குறிப்பாக பெண்ணிடமும், ஆதாமிடமும் பேசப்பட்டது. விசேஷமாக, பெண்ணிடம் பேசப் பட்டதை நாம் அறிய ஆவலாயிருப்போம். அதென்னவென்றால் " அவர் ஸ்திரீயை நோக்கி; நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக் கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார் " (ஆதி. 3:16).

பாவத்தின் விளைவாக துக்கமும், வேதனையும் இந்த உலகில் கொண்டுவரப்பட்டது. மானிட இனத்தில் சரிபாதியாக பெண் என்பவள் அதிக உணர்ச்சி உள்ளவளாகவும், மனவெழுச்சி யுள்ளவளாகவும் இருப்பதால் இந்த சம்பவத்தில் அதிக சுமையை ஏற்க வேண்டியதாயிற்று. அவளுடைய கர்ப்பத்தின் வேதனை அதிகரிக்கப்பட்டது. பிள்ளை பெறும்போதும், வேதனையை உண்டாக்கிவிட்டார். அத்தோடு மட்டுமல்லாமல், தன் கணவனுடைய அதிகாரத்திற்கு உட்படவும் தள்ளப்படு கிறாள். அவள் ஆசை அவள் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் அவளை ஆண்டு கொள்ளுவான்.

மேலும், ஒரு கிறிஸ்தவ கணவனுக்கும், மனைவிக்கும் வேண்டிய ஆலோசனைகளை I பேதுரு 3:1-7 வசனங்களில் வாசிக்கிறோம். " அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்தி அவள் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந் திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது "; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த

பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

" அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள் ".

தேவனுடைய அதிகாரம் நிறைந்த கட்டளைகள் பற்றியும், குடும்பத்திற்கு தலையாக தேவன் புருஷரை ஏற்படுத்தியது பற்றியும், முழுக்குடும்பத்திற்கும் வழிகாட்டியாக ஆண் இருப்பது பற்றியும் இந்த வசனங்கள் நமக்கு விளக்கமாகச் சொல்லுகிறது. கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டுமென்று கட்டளையாகக் கூறப்படுகிறது. புருஷர்கள் தங்கள் மனைவிகளை அன்போடும், புரிந்து கொள்ளுத லோடும் நடத்திச் செல்ல வேண்டும். ஆனால், ஒருவேளை மனைவிதன் கணவனைவிட அதிக புத்திசாலியாக இருந்தால் அல்லது அவனைவிட சிறந்த வழிநடத்தும் தகுதிபடைத்தவளாய் இருந்தால் அவள் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளலாமா? இல்லை. தேவன் தாமே ஏற்படுத்திய அந்த ஒழுங்குக்கு மாறாகச் செயல்பட எந்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

தேவன் விதித்திருக்கிற, இந்த அதிகாரமுள்ள கட்டளையை உணர்ந்து ஆண்களும், பெண்களும் தங்களுடைய துணையை தேர்ந்தெடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஒரு சமார்த்தியமான பெண், பலவீனமான ஆணைத் திருமணம் செய்ய நேரிடும்போது அவளுடைய பொறுப்பெல்லாம், ஓர் "உதவிக்காரியாய் ", " ஏற்ற துணையாய் " அவன் தலைமையேற்றுச் செல்லும் விதத்தில் அவனுக்கு தைரிய மூட்டுபவளாக இருக்க வேண்டுமேயொழிய, அவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்தி அவனை இன்னும் பலவீனப்படுத்திவிடக் கூடாது.

இந்த வசனங்களில் காணும் அதிகாரங்கள் வெறுமனே கணவனும் மனைவியும் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் மட்டுமல்ல. கீழ்வரும் சில காரியங்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஒரு பெண்ணின் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியும், தேவனுடைய பார்வையிலே மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது.

ஜெபங்களுக்குத் தடை ஏற்படாதபடி இருக்க, கணவனும், மனைவியும் நியாயமான உறவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கணவன், மனைவி ஆகிய இருவரின் உறவுகள், தங்கள் நியாயத்தின்படியும், கருத்தின்படியும் மாத்திரம் தங்களுக்குள் இருந்துவிடக்கூடாது. மாறாக, அவர்கள் இருவருக்குள்ளும் இருக்கும் உறவு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் மூலமாக, அவர்களுக்குள் இருக்க வேண்டும்.

எந்த ஒரு காரியத்திலும், தேவன் நமக்குக் கொடுத்திருப்பவைகளைத் தள்ளிவிட்டு, அவருக்கு பிரியமாய் நாம் இருக்க முடியாது.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அதிகாரத்தின் ஒழுங்கு பற்றி முடிவாகவும், தெளிவாகவும் 1கொரிந்தியர் 11:3-ம் வசனத்தில் பவுலால் கூறப்பட்டுள்ளது. " ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன் ".

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

## நீதிமொழிகளில் இளைஞர்களுக்கான அறிவுரைகள்

1. ஞானத்திற்கான முதல்படி தேவன் என்பதை ஏற்றுக்கொள் (நீதி. 1:7).
2. நீதியின் பாதையில் நட (நீதி. 2:)
3. ஞானத்திற்கும், உதவிக்கும் தேவனைச் சார்ந்து கொள் (நீதி. 3:5,6)
4. பெற்றோர்களுக்கு கீழ்ப்படி (நீதி. 3:11,12).
5. பாவிகளுடைய வழிக்கு சம்மதியாதே (நீதி. 1:10-19).
6. போதகத்தையும், புத்திமதியையும் ஏற்றுக்கொள் (நீதி. 5:12,13).
7. கர்த்தருக்கு அருவருப்பானவைகளை வெறுத்து ஒதுக்கு (நீதி. 6:16-18).
8. நற்குணத்தால் நிறைந்திடு (நீதி. 11 அதி).
9. சோம்பலுக்கு விடைகொடு (நீதி. 6:6,8).
10. முழு சரீரத்தையும் தேவனுக்கு ஒப்புக்கொடு (நீதி. 4:23-26)

வாலிபர் பகுதி

# வாலிபரின் "ஐக்கியம்"

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு வாலிப சகோதர சகோதரிகளே! இருளின் பிடியினின்று விடுவிக்கப்பட்டு ஒளியின் ஐக்கியத்தில் கிறிஸ்துவோடும், பிதாவாகிய தேவனோடும் இணைக்கப்பட்டு தேவ சேனைக்குள் யுத்த வீரர்களாய் தெரிந் தெடுக்கப்பட்ட ஜெப வீரர்களே உங்களுக்கு உயிர்த் தெழுந்து சாத்தானை ஜெயித்த மகத்துவமுள்ள இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறிக்கொள்ளுகிறேன். இந்த மாதம் திருமறை ஆசான் இதழின் வழியாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

ஐக்கியம் என்ற வார்த்தை " ஒற்றுமை " என்றும் ஒன்றோடு ஒன்று " இணைக்கப்பட்டு " என்றும் பொருள் கொள்ளலாம். ஐக்கியம் என்பது எல்லாதரப்பிலும் இருக்கிறது, ஐக்கியம் என்ற வார்த்தை சங்கம் (சங்கமம்) என்றும் அதையே ஆவிக்குரிய வகையில் " சபை " (சர்வசங்கமாகிய சபை) என்றும் அழைக்கப் படும். ஆக கிறிஸ்துவின் சபை என்பது கிறிஸ்துவுக்குள் இரட்சிக் கப்பட்டவர்களின் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் என்று பொருள். பிரியமான சகோதரர்களே நம்முடைய ஐக்கியம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

## I இருளின் ஐக்கியம் :

ஒளியின் ஐக்கியம் ஒரு போதும் இருளோடு இருப்பது இல்லை. இருளின் ஐக்கியமும் ஒருபோதும் ஒளியோடு இருப்ப தில்லை.... இருளின் ஐக்கியம் அது தனி சாம்ராஜ்யம், அது எப்போதும் மாம்சத்தை மகிழ்விக்கின்ற சாம்ராஜ்யம், நம்முடைய மாம்சமும் மனசும் விரும்பினதை செய்ய வைக்கும் ராஜ்யம், பாவத்துக்கு நம்மை அடிமையாக்கும் சாம்ராஜயம். இஷ்டம் போல் நடந்து இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள வழி செய்யும் சாம்ராஜ்யம். இன்மையின் நன்மைகளை பெற்று அனுபவிக்கும் இன்மைக்குரிய ராஜ்யம். " இருள் " என்றாலே மனுஷனுக்குள் வருகின்ற முதல் உணர்வு பயம்! ஆனால் இருளுக்குள் இருளாய் வாழ்ந்து கொண்டிருப்பவன் பயத்தை மறந்து இருளின் கிரியை செய்ய சரியான சமயம் இருள் சூழ்ந்த நிலை தான் என்று கருதுகிறான்.

மனிதர்கள் அனைவரும் பாவம் செய்து இருளுக்குள் ஐக்கியமானார்கள். இருள் அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டது. அந்த இருள் மூன்று வகையிலே செயல்பட வைக்கிறது.

(1) கண்களின் இச்சை (2) மாம்சத்தின் இச்சை (3) ஜீவனத்தின் பெருமை ஆகிய வடிவங்களில் மனுஷனுக்குள் கலந்து விடுகிறது. மேலும் வெளிப்படையாக சொல்லுவோமானால் தேவனுடைய அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள உயிரினங்களோடு ஒப்பிட்டு விக்கிரகாராதனை செய்வது, விபச்சாரம், வேசித்தனம், காமவிகாரம், பொருளாசை, கொலை வெறி, வஞ்சகம், அநியாயம், பில்லிசூனியம், களியாட்டு ரோமர் 1:28,29; 1 கொரி 6:9,10; கலா 5:19,20 போன்ற இருளின் கிரியைகளைச் செய்து பிசாசை பிரியப்படுத்தி வாழும் மக்கள் உண்டு. இன்றைய கிறிஸ்தவ இளைஞர்கள் அநேகர் இவைகளில் சிக்குண்டு கிறிஸ்துவின் நாமத்தை தூஷித்துக் கொண்டிருக்கின்றனர். ஆம், பிரியமானவர்களே, சகோதரனை சகோதரன் பகைப்பது இருளின் ஐக்கியத்துக் குள்ளான செய்கை சகோதரருக்குள்ளாக பிரிவினைகளை ஏற்படுத்துவது இருளின் ஐக்கியத்தின் வெளிப்பாடு 1 யோவா 2:9,10. இன்றைக்கு அநேக வாலிபருடைய ஐக்கியம் மதுபானத் தோடும், மதுபான வெறியரோடுமிருக்கிறது ஏசா 5:11. அதனால் வழி தப்பி, நெறிமாறி நடந்து தேவனுடைய கோபத்தை சம்பாதிக்கின்றனர். மதுபானத்தையும், திராட்ச ரசத்தையும் ஆசையாய் தேடுகிற வாலிபர்களே கவனியுங்கள். பாத்திரத்திலே (பாட்டில்) பளபளப்பாய் தோன்றுகிறதை நோக்குகிறாயே அதினால் வரும் பலனை அறியாயோ, அதினால் வருவ தெல்லாம் வேதனை, துக்கம், சண்டை, புலம்பல் காயங்கள் இரத்தங் கலங்கின கண்கள் இருளின் ஐக்கியத்தின் விளைவைக் கண்டாயா. இதுமட்டுமா..... சபிக்கப்பட்ட ஜனங்களோடு இணைக்கப்படுவாயே பிசாசிற்கும் அவனுடைய தூதர்களுக்கும் வரும் பலனை நீயும் பற்றிக் கொள்ள வேண்டியதாகுமே என்பதை யோசித்துப்பார்......

நீதி 23:35-39 இப்படி வேதனையுண்டாக்கும் வழிகளிலே காரியங்களிலே தங்களை இணைத்துக் கொண்டு ஐக்கியமாகி வாழ்கிறவர்கள் அனைவரும் இருளுக்குள் இருக்கிறார்கள். வாலிபர்களே, மனந்திரும்புங்கள். தூங்குகிறவர்களைப் போல் இராமல், வெறியர்களாயிராமல், விசுவாசமுள்ளவர்களாயும், தெளிந்த புத்தி, அன்பும் உள்ளவர்களாயும் கிறிஸ்துவின் மெய்யான ஒளியை தேடி அதில் ஐக்கிய மாவோம்.

அன்பு சகோதரனே, இருளிலே நீ மறைந்திருக்கலாம் ஆனால், கிரியைகள் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாய் தெரிகிறது. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு பாவத்தையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். இதுவெல்லாம் ஆண்டவருக்கு தெரியப் போகிறதா! என்று தப்பு கணக்குப் போட்டுக்கொண்டு உன் பாவங்களில் தொடராதே பிர 12:13,14-ல் அவனவனுடைய கிரியைக்குத்தக்க பலன் என்னோடே கூட வருகிறது என்ற ஆண்டவர் சொன்னார். அப்படியே செய்வார் வெளி 22:12. உன் இருளின் கிரியைகள்

உன்னை பின்தொடர்ந்து நீ அமுக்கப்பட்டு விடாதே. ஆகவே, இப்பொழுதே ஒளியை அறிந்து கொள்ள உன் இருதயத்தை பிரயோகம் செய். இப்பொழுதே மனந்திரும்பு, இயேசுவை அறிக்கை செய். இருளின் ஐக்கியத்தினின்று உன்னை விடுவித்துக்கொள். அப்பொழுது அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த புறம்பான இருளிலிருந்து நீ தப்புவிக்கப்படுவாய்.

## II ஒளியின் ஐக்கியம் :-

ஒளி (வெளிச்சம்) என்றாலே மனுஷனில் வருகிற முதல் உணர்வு சந்தோஷம் (மகிழ்ச்சி) மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. இருளிலே இருந்த ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்தனர் மத். 4:15 - ஒளியானது இருளை அப்புறப்படுத்தி அங்கே வெளிச்சத்தை நிரப்புகிறபடியால் அவன் வெளிச்சத்தால் மனுஷன் நிரப்பப்படுகிறபடியால் அவன் சந்தோஷப்படுகிறான். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மெய்யான ஒளி வந்திருந்தும் நம்முடைய கிரியைகள் பொல்லாததாய் காணப்பட்டால் ஒளியை பகைக்கிறவர்களாய் காணப்படுவோம். இருளை அதிகமாய் நேசிக்கிறவர்களாயிருப்போம். அன்பான வாலிப சகோதரர்களே, சகோதரிகளே உனக்குள் ஒளியிருக்கிறதா? நீ ஒளியின் ஐக்கியத்தில் இருக்கிறாயா? அப்படியானால் உன் கிரியைகள் வெளியரங்கமானதாயும் நீதி நிறைந்ததாயும் காணப்படும் யோவா 3:19-21. அந்தரங்கத்திலே கிரியைகளை நடப்பிப்பா யானால் நீ அந்தகாரத்திலே நடக்கிறவனாயிருப்பாய். இயேசு ஆண்டவர் சொன்னார் நான் உலகத்திற்கு ஒளியா யிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் யோவ 8:12 என்றும் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் தொடர்ந்தால் தான் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் (ஒளியின் ஐக்கியத்தில்) இருக்கிறோம் என்று பொருள். இயேசு உலகின் ஒளியாயிருக்கிறார் என்றால் அந்த ஒளி கற்பிக்கின்ற வழியில் நடக்க வேண்டும். அந்தகாரக் கிரியைகளை நமக்கு இயேசு கற்றுக்கொடுக்கவில்லை. அவைகள் பிசாசினுடையது ஒளியாகிய இயேசுவிடமுள்ளது " சத்தியம் " மட்டுமே. ஆகவே சத்தியத்தை கேட்டு அவைகளின்படியே செய்வோமானால் அவைகளால் பிழைப்போம். அந்த மெய்யான நீதி, பரிசுத்தம், தேவசாயல் எபே 4:18-24 - அப்போஸ் தலனாகிய யோவான் சொல்லுகிறார் எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வோடும் இருக்கிறது என்று அதுதான் நிறைவான சந்தோஷம் என்றும் சொல்லி நமக்கும் அறிவுறுத்துகிறார். தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அப்படியானால் அன்பு சகோதரர்களே அவருடைய பிள்ளைகளாயிருக்கின்ற நாம் ஒளிக்குள் ஐக்கியப்பட்டவர்கள் என்றே பொருள். ஒளியிலே இருக்கிறோம் என்றால் சத்தியத்தின்படி நடக்க வேண்டும் சத்தியத்தின்படி

செய்யும்போது ஒளியை நாம் பிரதிபலிக்கிறோம். ஒளியிலே நடந்தால் தான் ஒளியிலே ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்று பொருள். ஒளியின் கிரியைகளை நடப்பிக்க வேண்டுமானால் தொடர்ந்து ஒளிக்குள் நிலைத்திருக்க வேண்டும். ஒளியின் பிள்ளைகளாகிய நாம் உலகத்தோடு ஐக்கியப்படாமல் அந்நிய நுகத்தில் பிணைக்கப்படாமல் பேலியாளின் கிரியைகளைச் செய்யாமல் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

ஒளியின் ஐக்கியத்தினால் நம்மில் உருவாகும் கனிகள் ஆவியின் கனிகள் ஒன்பதும் விளையும். சகல நற்குணத்திலும் ஆவியின் கனி வெளிப்படும். இவைகள் அனைத்தும் ஒளியின் ஐக்கியத்தினால் வரும் தேவ மகிமைக்கேற்ற கனிகளே. அதே போல ஒளியின் ஐக்கியத்தில் வாழ்கின்ற நமக்கு தேவனிடத்திலிருந்து வரும் பலன்களும் உண்டு. ஆம், பிரியமானவர்களே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்குண்டு; ஆகவே ஒளியின் ஐக்கியத்தின் மக்களாகிய நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. மேலும் வாடாத ஜீவக்கிரீடத்தைப் பெற்றுக் கொண்டு என்றென்றைக்கும் பரலோகத்தில் வீற்றிருக்கப் போகிறோம். ஆகவே, ஜீவனையும் அழியாமையையும் சுதந்தரிக்கப் போகிறவர்களாகிய நாம் அனைவரும் பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி. நன்மை செய்து கிறிஸ்துவுக்குள் எப்போதும் சந்தோஷமாயிருந்து இடைவிடாமல் ஜெபித்து தேவனை நம்பிக் கொண்டிருப்போமானால் கிறிஸ்து இயேசுவுக்குள் கனி கொடுத்து வாழ்வோமானல் அவருக்கு சீஷராயிருப்போம். அப்பொழுது நாம் வேண்டிக் கொள்வது எதுவோ அது நமக்குக் கிடைக்கும் என்கிறார். பிரியமான சகோதரனே, எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று இயேசுவின் வருகையின் காலமும் நெருங்கிற்று. ஆகவே, நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து கிறிஸ்துவின் ஒளிக்குள் வாழ்வோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

***K. சேகர்,*** திருப்பூர்.

நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.

1யோவா 1:6

சிறுவர் பகுதி

# தேவன் கேட்கிறார்!

எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மாதந்தோறும் வெளிவரும் செய்திகளும், தகவல்களும் உங்களுக்கு பிரயோஜனமாய் உள்ளதாயிருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

உங்களுக்கு யோபு என்ற மனிதரைக் குறித்து தெரியுமா? சரி, நான் சொல்கிறேன். கவனியுங்கள். தேவனுக்கு பிரியமானவரும், சன்மார்கருமான மனிதன் அவர். இயேசு கிறிஸ்துவுக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்தவர்.

தேவன் யோபுவை சோதிக்கும்படி அவரை கஷ்டங்களையும், பாடுகளையும் அனுபவிக்கும்படி அனுமதித்தார். அவரும் தேவன் நினைத்தவாறே என்ன சொல்கிறான் பாருங்கள். அவர் என்னை கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்; என்று கூறியிருக்கிறார்.

சில நேரங்களில் அவர் சோர்வடையும் போது, அவர் ஏன் தேவனே இப்படி செயல்படுகிறீர் என்று கேட்பார். எனவே, யோபுவிற்கு சில பாடங்களை கற்றுக்கொடுக்க தேவன் முடிவு செய்து, சில கடினமான கேள்விகளை கேட்க திட்டமிட்டார். இந்த கேள்விகள், மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அநேக காரியங்கள் உண்டு என்று யோபுவிற்கு விளங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கேட்கப்பட்டது.

ஆக, தேவனிடம் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை கேட்கக்கூடாது. நம்மால் புரிந்து கொள்ள இயலாதது. அநேக காரியங்கள் உண்டு.

யோபு 38, 39 ஆம் அதிகாரத்தை வாசித்து பாருங்கள்! அங்கே தேவன் கேட்கும் கேள்விகளுக்கு உங்களிடத்தில் பதில் உண்டா?.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் இருக்கிறது.

நமக்கு ஏற்படுகின்ற சோதனையினாலும், கஷ்டங்களிலும் தேவனை எதிர்த்து, நம் ஞானத்தை கொண்டு கேள்விகளை எழுப்பாமல், தேவன் மீது நம்பிக்கையும், அவர் வார்த்தைகளின் மீது விசுவாசமும் வைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமக்கு நினைவுக்கு வர வேண்டிய வசனம் (1கொரி 10:13). அது, மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்று சொல்கிறது.

இந்த வார்த்தையின் மீது நம்பிக்கை வைப்போம்! தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்!.

**Abel R. Nayagam**

## நாளும், நடப்பும்

1. அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மாநிலம் தான் என்று தலாய்லாமா அறிவிப்பு.
2. வங்கக்கடலில் உருவான புயல் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.
3. பா.ஜ.க தலைவர்களில் ஒருவரான அத்வானி அரசியலிருந்து ஓய்வு பெறுவார் என்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு.
4. முல்லைப்பெரியாறு அணை சர்ச்சை தொடர்ந்து நீடிக்கிறது.
5. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு அறிவிப்பால் கோவை மாநகருக்கு அபிவிருத்தி திட்டங்கள்.
6. இந்தியில் பதவிப் பிரமாணம் எடுத்ததற்காக சமாஜவாதி எம்.எல்.ஏ மகாராஷ்டிரா சட்டசபையில் தாக்கப்பட்டார்.
7. ஆஸிக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை இந்தியா இழந்தது.

# உங்கள் வலைகளைப் போடுங்கள்

லூக்கா ஐந்தாம் அதிகாரத்தில் பேதுருவின் விசுவாசத்தை சோதிக்கும்படியான ஒரு சவாலான விவரிப்பை நாம் வாசிக்கிறோம். பேதுரு இரா முழுவதும் பிரயாசப்பட்டு மீன் பிடித்தும் ஒன்றும் அகப்படாததால் களைப்படைந்து கரையிலே வலைகளை அலசிக்கொண்டிருந்தார். அவ்வழியாக வந்த இயேசு தன்னோடு படகில் ஏறும்படி பேதுருவுக்கு அழைப்பு விடுத்து கடற்கரையோரத்தில் கூடியிருந்த ஜனங்களுக்கு போதகம் பண்ணும்படிக்கு படகைக் கரையிலிருந்து சற்று தள்ளும்படி பேதுருவைக் கேட்டுக்கொண்டார். ஜனங்களுக்கு போதித்த பிறகு இயேசு பேதுருவை திரும்பிப்பார்த்து ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். பேதுரு தயங்கினார். ஓர் அனுபவமிக்க மீனவனாக இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்பதை இயேசுவிடம் சுட்டிக் காட்டிவிட்டு மற்ற எல்லா விசுவாச மனுஷர்களும் என்ன காரணத்திற்காக செயல்பட்டார்களோ, அதே காரணத்திற்காக இவரும் செயல்பட்டார்; அதைச் செய்யும்படி கர்த்தர் சொன்னார். அதற்குச் சீமோன்; ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போகிறேன் என்றான்.

அதன் பலன் ஆச்சரியப்படத்தக்கதாய் இருந்தது! அவர்கள் தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்ற படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். பேதுரு அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து அவருடைய சமூகத்தில் இருப்பதற்கு தான் பாத்திரன் அல்ல என்று ஒப்புக்கொண்டார். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி; பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது, பேதுருவும், அவருடைய கூட்டாளிகளும் பிடித்த மீன்களை கரையிலே கொண்டு சேர்த்துவிட்டு, எல்லாவற்றையும் விட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு பேதுரு விசுவாசத்தில் உறுதியாக எப்போதும் இராவிட்டாலும், பல சூழ்நிலைகளில் விளைவைப் பற்றி கவலைப்படாமல் துடிப்பாக காரியங்களை செய்திருந்தாலும், பின்பு மனுஷரைப் பிடிக்கச் சென்ற போது படகில் அவர் கற்றுக் கொண்ட பாடத்தை நினைவு கூர்ந்தார். பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமில் திரளான கூட்டத்திற்கு பேதுரு பிரசங்கித்ததை லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகள்

இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறார். தேவனும் நடைமுறையில் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் சுவிசேஷ வலையை விரிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். பேதுருவால் இது சரியான நேரம் இல்லை, சரியான இடம் இல்லை என்று வாதாடியிருக்க முடியும். ஆனால், அதே இடத்தில் தான் இயேசு சில நாட்களுக்கு முன்பு கொல்லப்பட்டார், இதே ஜனங்கள் தான் நம்முடைய ஆண்டவரை துன்மார்க்கமான கைகளால் சிலுவையில் அறைந்தார்கள்! எனவே, இங்கே வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பே இல்லை. ஆனாலும், தேவனுடைய அறிவுரையின்படி பேதுரு சுவிசேஷ வலையை விரித்தார் அதிலே ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் நிரப்பப்பட்டார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில் பேதுரு புறஜாதிகள் மத்தியிலே சுவிசேஷ வலையை விரிக்கும் படியாக பணிக்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப்படிச் செய்ய தொடங்குவதற்கு அது சரியான காலம் என தரிசனத்தின் மூலமாக அவருக்கு அடையாளமாகக்காட்டப்பட்டது. பேதுரு சுவிசேஷ வலையை விரித்தபோது அது தேவபக்தியுள்ள கொர் நேலியு மற்றும அவனுடைய வீட்டாரனைவராலும் நிரப்பப் பட்டது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேதுரு வினால் விரிக்கப்பட்ட சுவிசேஷ வலை இன்றும் பெலனுள்ளதா யிருக்கிறது (ரோமர் 1:16). தனனுடைய பிற்காலத்தில் பேதுரு நரைமுடியுடைவராய், அனுபவமிக்கவராய் இந்த வார்த்தை களை எழுதினார். " மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷ ருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷ மாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் " இதுவே என்று. (1பேதுரு 1:24,25).

சுவிசேஷம் என்கிற வலை உங்கள் கைகளில் இருக்கிறது அதை விரியுங்கள்! எப்போது? " சமயம் வாய்த்தாலும், வாய்க்கா விட்டாலும் (II தீமோத்தேயு 4:2) எங்கே? யாருக்கு? சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் " (வெளி 14:6). விசுவாசமில்லாதவர்கள் அதை எதிர்ப்பார்கள். அவர்கள் பழங்காலத்து சுவிசேஷம் இந்த நவீனகாலத்திலே எடுபடாது என்று உங்களிடம் சொல்வார்கள். அவர்கள் பழங்கால சுவிசேஷத்திற்கும், நவீன மனிதனுக்கும் இடையே ஏராளமான கலாச்சார தடைகள் இருக்கிறது என்று சொல்வார்கள். அவர்கள் வலையை சற்று மாற்ற வேண்டும் என்று உங்களை உற்சாகப்படுத்துவார்கள். ஆனால், பழங்காலத்து சுவிசேஷம் பரலோகத்தில் உண்டாக்கப்பட்டது. அது என்றென் றும் நிலைத்திருக்கிறது. நம்முடைய கர்த்தர் நீங்கள் வலையைப் போட்டு விட்டு விளைவை அவரிடத்தில் விட்டுவிட வேண்டும் என உங்களுக்கு கட்டளையிடுகிறார். அவருடைய வார்த்தைக்கு நீங்கள் என்னச் செய்வீர்கள்?.

**TIM NICHOLS** **BENNY MARTIN**

பாவத்தின் பயங்கர பிடியிலிருக்கும் நம்மை மீட்க, பரலோகம் துறந்து, நரர்வுலகில் அவதரித்து, தேவனுடைய சித்தத்தை செய்வதையே போஜனமாகக் கொண்டு, அதை பக்கு வமாய் நிறைவேற்ற பாரச் சிலுவை சுமந்து கோரமாய் மரிக்கவும் தன்னை ஒப்புக்கொடுத்து, சதிகார சாத்தானின் சூழ்ச்சி வலையை அறுத்தெரியும் வண்ணமாய் தேவனுடைய சத்துவத்தின் பெலத்தி னால் கல்லறை விட்டெழுந்த நாளான ஞாயிற்றுக்கிழமையில், தேவனை ஆராதிக்கும் சமயத்தில் இயேசு ஆண்டவர் நமக்காக ஜீவன் தந்ததை நினைக்கும் தருணமான கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிக்கும் போது சகோதரர்களால் அதிகமாக தியானிக்கப் படும் வசனப்பகுதி ஏசாயா தீர்க்கன் எழுதிய நூலின் 53ம் அதிகாரம் என்பதில் எள்ளின் நுனியளவும் சந்தேகம் கொள்ளா மல் என்னோடு நீங்களும் " ஆம் " என்று ஆமோதிப்பீர்களென திடமாய் நம்புகிறேன்.

அறுபத்தாறு அதிகாரங்களைக் கொண்ட ஏசாயா தீர்க்கனின் நூல் ஒரு குட்டி வேதாகமம் என்று அழைக்கப்படுவதில் தவறில் லை. ஏனெனில், வேதமும் அதே, எண்ணிக்கையிலான அதிகாரங் களை கொண்டது. அதுமட்டுமல்ல, பாவத்தின் அடிமைத்தனத் திற்குள்ளான மனிதனைப் பற்றிப் பேசும் முப்பத்தியொன்பது புத்தகம் பழைய ஏற்பாடு என்றும், மனிதன் பாவத்தின் அடிமை தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதைப் பற்றிப்பேசும் இருபத்தேழு புத்தகம் புதிய ஏற்பாடென்றும் வேதாகமம் எப்படி பிரிக்கப்படுகிறதோ அதுபோல இந்நூலும் முதல் முப்பத்தி யொன்பது அதிகாரம், தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவிற்கு நேரி டப்போகிற அடிமைதனத்திற்கான காரணமும், அதிலிருந்து யூதா எப்படி விடுவிக்கப்படும் என்பதையும் பற்றி பேசுவதால் வேதாக மத்தைப் போலவே இதுவும் பிரிக்கப்பட முடியும் என வேத வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்த ஆண்டவரைத் தரிசித்த மாத்திரத்தில், " அசுத்த உதடுகளுள்ள மனுஷன் " என்று தனக்குவமையில்லாத தற்பரன் முன்பு தன்னை தரைமட்டும் தாழ்த்திய ஏசாயா தீர்க்கன் தேவ ஆவியானவரின் துணை கொண்டெழுதிய ஐம்பத்தி மூன்றாம் அதிகாரம் அந்த நூலின் பிற்பகுதியான இருபத்தேழு அதிகாரங்களுள் ஒன்று. இந்த ஐம்பத்தி மூன்றாம் அதிகாரம், நமதாண்டவர் பூமியில் அவத ரித்து நமக்காக பாடுபடுவதற்கு சுமார் 750 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இந்நூலில் " கர்த்தருடைய தாசனைப்பற்றி " எழுதப் பட்டுள்ள நான்கு பகுதியில், இந்த அதிகாரம் நான்காம் (இறுதி) பகுதியாக இருக்கிறது. இந்த பகுதிகளை ஒவ்வொன்றாக அறிமுகப்பாடத்திற்குப்பின் நாம் இணைந்தாராய்ந்து பார்க்கப் போகிறோம். ஆகவே, இந்த தொடர் கட்டுரையில் ஒவ்வொன் றையும் நீங்கள் படித்து, தியானித்து உங்கள் கருத்தறையில் ஏற்றிக் கொண்டு, அதன்படி நடக்கத் தவற வேண்டாம்.

நமது பாவத்திற்கான கிருபாதார பலியை பற்றிய உபதேசத்தை பற்றிப் பேசும் புதிய ஏற்பாடு, துன்பப்படும் தாசன் பற்றிய தீர்க்கதரிசனத்தை மையமாகக் கொண்டே பேசுகிறது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் 34 முறை, ஏசாயா யாத்துக் கொடுத்த தாசனைப்பற்றிய தீர்க்கதரிசனம் இயேசுவில் நிறை வேறியதாக அறிவிக்கிறார்கள் (உதாரணம். அப். 8:32- 35; 1பேதுரு 2:22-25) அவைகளில் சிலவற்றை மாத்திரம் நாம் இங்கு காண்போம்.

முதலாவதாக, தமது ஊழிய நாட்களில், நன்மை செய்தவராக சுற்றித் திரிந்த இயேசு ஆண்டவர், ஒரு முறை கப்பர்நகூமில் பிரவேசித்த போது, “ நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் ” (மத். 8:8) என்று தன்னை தாழ்த்தி இயேசுவின் வார்த்தையின் வல்லமையில் நம்பிக்கை வைத்து, தன் வேலைக்காரனுக்காக வேண்டின நூற்றுக்கதிபதியின் சம்பவத்தையும், வியாதியாயிருந்த மற்றவர்களை இயேசு குணமாக்கின சம்பவத்தையும் எடுத்துரைத்த மத்தேயு ஆசிரியர், அந்த சம்பவங்கள் மூலமாக, “ நம்முடைய நோய்களைச் சுமந்தார் ” என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியதாக கூறுகிறார். (மத்தேயு 8:16,17; ஏசாயா 53:4; I பேதுரு 2:24).

இயேசு ஆண்டவர் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் மேசியாவாக இருக்கிறார் என்பதை யூதர்கள் உணர வேண்டும் என்ற நோக்குடன், பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் மேசியாவின் தீர்க்கதரிசனங்களை எடுத்துக்காட்டி, இது இயேசுவில் நிறைவேறுகிறது என்று மத்தேயு ஆசிரியர் எடுத்துரைத்திருக்கிறார் என்பது வேத அறிஞர்களின் கருத்தாகும். உயிர்த்தெழுதல் உண்டென்று நம்புகிற பரிசேயர், இயேசுவின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டு, அவரை கொலை செய்துவிட வேண்டுமென்ற ஆலோசனை செய்கையில், மத்தேயு ஆசிரியரால் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்து எழுதப்பட்ட மிக நீண்ட பகுதியில், இப்படி பரிசேயர்கள் இயேசுவை நிராகரிப்பதும் மேசியாவைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் தான் என்பதை அழகுபட எடுத்துக்காட்டியிருக்கிறார் (மத்தேயு 12:14-21; ஏசாயா 42:1-4).

இரண்டாவதாக; ஒவ்வொரு அதிகாரத்திலும் இயேசுவின் சேவையையும், தியாகத்தையும் பற்றி பேசும் மாற்கு ஆசிரியர், இயேசு தீவிரமாக செயல்படும் தேவனுடைய தாசன் என்பதை காட்டும் வண்ணமாக “ உடனே ” என்கிற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தியிருப்பார் (1:42; 2:8,12; 5:29,30,42; 6:50; 7:35; 8:10; 10:52) இப்படி இயேசுவைப் பற்றி எழுதின மாற்கு, அவர் பாடுபடுவதைக் குறித்து, “ ....அல்லாமலும் மனுஷகுமாரன் பல

பாடுகள் பட்டு, அவமதிக்கப்படுவாரென்று, அவரைக்குறித்து எழுதியிருக்கிறதே " என்று எழுதியிருக்கிறார் (மாற்கு 9:12; ஏசாயா 53:1-12).

மூன்றாவதாக, மருத்துவரான லூக்கா, இயேசுவின் மனுஷீகத்தை தத்ரூபமாக தன் நூலில் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார். நமதாண்டவரின் பிறப்பை ஒட்டி நடந்த சம்பவங்களையும், இயேசுவின் வம்ச வரலாற்றையும் எடுத்துரைத்த பின் லூக்கா, படிப்படியாக மிக கவனமாக வரிசைக் கிரமமாக இயேசுவின் ஊழியத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவும் வந்த மனுஷகுமாரன், தன்னுடைய மரணத்தை பற்றி எழுதியிருப்பதை நிறைவேற்றினார் என்பதை காட்ட, " அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேற வேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்...." (லூக்கா 22:37; ஏசாயா 53:12) என்று லூக்கா ஆசிரியர், ஏசாயாவின் தீர்க்கதரிசினத்தை மேற்கோள்காட்டியிருக்கிறார்.

நான்காவதாக, எப்படி ஒரு காசுக்கு இரண்டு பக்கம் உண்டாயிருந்து, இரண்டும் ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ, அதுபோல, நமதாண்டவருக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. லூக்கா, அவர் " *மனுஷ குமாரன்* " என அவருடைய மனுஷீகத்தை காட்டியிருக்க, யோவான் ஆசிரியர் அவரை தெய்வீகம் நிறைந்தவராக *தேவனுடைய குமாரனாக* சித்தரிக்கிறார். யோவானின் நூல் வரிசைக் கிரமமாக அமையாமல், தலைப்புகள் வாரியாக அதாவது, இயேசு செய்த ஏழு அற்புதங்களால், இயேசுவால், " நானே " என்று சொல்லப்பட்ட ஏழு வாக்கியங்கள், இவைகளைச் சுற்றியே அமைந்திருக்கிறது. இயேசுவால் அநேக அற்புதங்கள் செய்யப்பட்டும், பெரும்பாலான யூதர்கள் அவரை விசுவாசிக்கவில்லை (யோவான் 12:37) இதுவும் கூட, தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே என்று யோவான் ஆசிரியர் எடுத்துரைக்கிறார், " கர்த்தாவே எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய பயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது... " (யோவான் 12:38,39,40; ஏசாயா 53:1; 6:9,10). நாமும் அந்த யூதர்களைப் போலிராமல், யோவான் நூலும், கர்த்தருடைய மற்ற நூல்களும் எதற்காக எழுதப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி (யோவான் 20:30,31) கர்த்தருடைய தாசனாகிய இயேசுவின் மீது விசுவாசம் வைப்போமாக. ஆமென்!

**(தொடரும்)** **ஜே. பிக்கின்ஸ்**

# ஏலியின் குமாரர்களிடமிருந்து பாடங்கள்

ஏலி பதினைந்து நியாயாதிபதிகளில் பதினான்காவது நியாதிபதியாக இருந்தார். ஏலியின் குமாரர்களின் சுபாவத்தை 1சாமுவேல் புத்தகத்தின் இரண்டு, மூன்று அதிகாரங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. இவர்கள் பேலியாளின் மக்களாயிருந் தார்கள் என்று சொல்லப்படுகிறது. பேலியாள் என்பதற்கு மதிப் பற்றது என்று பொருள். ஏலியின் குமாரர் மதிப்பற்றவர்களாகப் போனதற்கு மூன்று காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது, ஏலியின் குமாரர் கர்த்தரை அறியவில்லை (2:12). இயேசு கிறிஸ்து யோவான் 7:17ல் இப்படியாகச் சொல்கிறார். அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெ வனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனே என்று அறிந்து கொள்ளுவான். இந்த சித்தத்தை பிள்ளைகளுடைய மனதிலே புகுத்தி அவர்களை அறியச் செய்வது பெற்றோர்களுடைய பொறுப்பாயிருக்கிறது (நீதிமொழிகள் 22:6). ஒருவர் சத்தியத்தை அறியவில்லை யென்றால் எப்படி விடுதலையாக்கப்பட முடியும்?. ஏலியின் குமாரர் கர்த்தரை அறியாதபடியினால் துக்கப்படும்படியான பாவத்தைச் செய்தார்கள்.

இரண்டாவது, ஏலியின் குமாரர் கர்த்தருடைய பலியை அவமதித்தார்கள் (2:13-17) வேதாகமத்தில் வேறு சிலரும் தேவனுடைய ஆராதனையை லேசாக எடுத்திருக்கிறார்கள்; ஆதி யாகமம் நான்காம் அதிகாரத்தில் காயீன், லேவியராகமம் பத்தாம் அதிகாரத்தில் நாதாபும், அபியூவும். ஒருவர் தேவனை யோ, தேவனுடைய சித்தத்தையோ அறியவில்லையென்றால் அப்படிப்பட்டவன் தன் பார்வைக்கு சரியானபடி பெரும்பாலும் செய்கிறார் (நியாதிபதிகள் 17:6).

மூன்றாவது, ஏலியின் குமாரர் ஒழுக்கக்கேடானவர்கள் (2:22). வெளிப்படையாகவே அவர்களுக்கு இச்சையடக்கத் தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் மாம்ச இச்சை களுக்கு அடிபணிந்து பாலியல் குற்றங்களில் ஈடுபட்டார்கள். சிலர் இவர்கள் விக்கிரக ஆராதனையோடு சம்மந்தப்பட்ட காமக் களியாட்டுகளில் ஈடுபட்டதாக நம்புகிறார்கள். வெளிப்படை யாகவே ஏலியின் குமாரர் முற்றிலுமாகவே பத்துக் கட்டளைக ளை மறந்துவிட்டார்கள். நம்முடைய உலகமானது தொலைக் காட்சி மற்றும் திரைப்படங்களில் காட்டப்படும் அசிங்கமான காட்சிகளால் செல்வாக்கு செலுத்தப்படுகிறது. நாம் வாசிக்கும் புத்தகங்களில் ஆபாசக்காட்சிகள் காட்டப்படுகின்றன.

சுகபோகத்திற்காக இசையை கேட்டுக்கொண்டு சரீரங்களை தெய்வமாக தொழுது கொண்டிருக்கிறார்கள், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என்று பவுல் போதித்தார் (1கொரி 15:33). ஏலி தன்னுடைய குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப் பண்ணுகிறதை அறிந்திருந்தும் அவர்களை அடக்காமல் போனான் (3:13). பிள்ளைகள் வளர்ப்பு என்பது பெற்றோர்களுடைய தலையாய பொறுப்பாகும். பிள்ளைகளை அடக்கி வளர்ப்பதும் அவர்களுடைய கடமையாகும். பிள்ளைகள் அவர்கள் விரும்பியதையெல்லாம் வைத்துக்கொள்ள முடியாது. அதைப்போலவே அவர்கள் விரும்பியதை எல்லாம் செய்யவும் முடியாது. நாம் நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்கவில்லை என்றால் (எபேசியர் 6:4) நாம் நம்முடைய பிள்ளைகளை தேவனுக்கு மேலாக கனப்படுத்துகிறோம், (2:29) அது நாம் தேவனிடத்தில் அவிசுவாசமாயிருக்கிறோம் என்று தான் பொருள்படும்.

நம்முடைய நாட்களில் பெற்றோர் பிள்ளைகளை கட்டுப்படுத்துவது அவசரத் தேவையாயிருக்கிறது. இன்றைய நாட்களில் பிள்ளைகள் தீமை செய்வதற்கு ஏதுவாக இந்த உலகம் இருக்கிறது அதற்கு ஏராளமான தீமையான உதாரணங்களும், சோதனைகளும் உதவி செய்கின்றன. எனவே, பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கட்டுப்பாடு விதிப்பது கட்டாயமாயிருக்கிறது. இது பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல தேவனுக்கு நாம் செய்ய வேண்டிய கட்டாயமாயிருக்கிறது, உபாகமம் 6:3-9; 21:18-21; நீதிமொழிகள் 19:18; (எபேசியர் 6:4). பிள்ளைகளை அடக்கி வளர்க்காமலிருப்பது தவிர்ப்பது பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், தேசத்திற்கும் கேட்டை விளைவிக்கும் (I சாமுவேல் 4:11, 18,22).

பெற்றோர்கள் பிள்ளைகள் மீது விதிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை விதிக்கட்டும், அதைப்போலவே பிள்ளைகளும் பெற்றோர்களுக்கு செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்தட்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கும் போது பிள்ளைகள் தங்கள் தகப்பனையும், தாயையும் கனப்படுத்துவார்கள்.

**MAX PATTERJON** **BENNY MARTIN**

# நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருக்கிறார்

**I நொறுங்குண்ட இருதயம் என்பது என்ன?**

(நீதி 20:9) நம்மில் யாரும் ஒருபாவமும் என்னிடம் இல்லையென்றோ அல்லது (யாக் 3:2) நான் எந்த ஒரு விஷயத்தி லும் தவறியதில்லை என்றோ நம்மில் யாரும் சொல்வதற்கில்லை.

I கொரி 4:4 ல் பவுல் சொல்லும் போது என்னிடம் யாதொரு குற்றத்தையும் அறியேன். ஆனாலும் நான் நீதிமானாகிறதில்லை என்று சொல்வாரானால் நீங்களும், நானும் எம்மாத்திரம். அப்படியானால் மேற்கண்ட வசனங்கள் நாம் தொடர்ந்து பாவம் செய்வதையும் தேவனுடைய கற்பனைகளை மீறி நடப்பதையும் உற்சாகப்படுத்துகின்றனவா? ஏசா 66:5 கர்த்தருடைய வசனத் திற்கு நடுங்குகிறவர்களே; அவருடைய வார்த்தையைக் கேளுங் கள். எவர்களுடைய இருதயம் தேவனுடைய சத்தத்திற்கு நடுங் கிறதோ அதுவே தேவன் வாசம்பண்ண விரும்பும் இருதயம். எவர்களுடைய இருதயம் தங்கள் தவறுக்கு மனஸ்தாபப்பட்டு திருந்தி தேவனுக்குப் பிரியமாய் வாழ்கின்றனரோ அவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருந்து அவர்களை இரட்சிக்கிறார். அவர் களை கனப்படுத்தி உயர்த்துகிறார்.

அப்படிப்பட்ட இருதயம் உள்ள சில தேவதாசர்களைப் பற்றிப் பார்ப்போம்.

1. தாவீது 2. பேதுரு 3. பவுல்

**II தாவீதின் இருதயம் நொறுங்குண்டது**

தாவீது ஆடு மேய்க்கும் வாலிபனாய் இருந்தபோது (1சாமு 17:21-26) பெலிஸ்தியனாகிய கோலியாத் சேனைகளின் கர்த்தரை நிந்தித்ததை சகிக்க முடியாத தாவீது தன் உயிரையும் பணயம் வைக்க துணிந்தார்.

(A) பிற்பாடு இஸ்ரவேலில் ராஜாவானபோது சாமுவேல் 11 மற்றும் 12 அதிகாரங்களில் தாவீது உரியாவின் மனைவியை தவறாக நடப்பித்தார். (2) அந்த தவறை மறைக்கும்படி உரியா வை தந்திரமாக கொன்று போட்டார்.

(B) 1 நாளா 21:1-3,5 சாத்தானுடைய ஏவுதலின்படியே இஸ்ரவேலில் பட்டயம் உருவத்தக்கவர்களை தொகை பார்க்கச் சொன்னார்.

இந்த இரண்டு காரியங்களுமே கர்த்தரின் பார்வையில் பாவமாயிற்று. தேவன் தமது தீர்க்கதரிசியாகிய காத் மூலமாக உணர்த்தினார். (II சாமு 12:13 மற்றும் I நாளா 21:15 - 17) தாவீது தன்னைத் தாழ்த்தியததைப் பார்கிறோம். அது மாத்திரமல்ல சங்கீதம் 51 முழுவதும் தாவீதின் கதறல்கள் தான்.

எங்கே தேவன் தன்னை விட்டு விலகி விடுவாரோ என்று எவ்வளவு கண்ணீர் விட்டார் பாருங்கள். பின் ஒருபோதும் தாவீது இப்படிப்பட்ட தவறுகளை அவர் செய்யவில்லை என்று (1ராஜா 15:5) கர்த்தரே சாட்சி கொடுத்தார்.

### III பேதுருவின் இருதயம் நொறுங்குண்டது

(மத் 26:69-75) மற்றும் யோவா 21:15 - 19 நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு ஊழியம் செய்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் பேதுரு மிகவும் அதிகமான தருணங்களில் ஆண்டவரோடு கூட இருந்தவர். (1) மத் 14:28-29 பேதுரு ஜலத்தின் மேல் நடந்தார் (2) மத். 16:16-19 ஆண்டவரை நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்தார். ஆனால், உயிர் பயமும், பிழைப்பை பற்றிய கவலையும் ஆண்டவரை மறுதலிக்கவும், சபிக்கவும் வைத்தது. யோவா 21ல் ஆண்டவர் பேதுருவின் தவறை உணர்த்தினார். 2 கொரி 7:10ன் படி பேதுரு தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தார். தன் மீதிக்காலத்தை எந்த ஆண்டவரை மறுதலித்தாரோ அவருக்காகவே வாழ்ந்து அவருக்காகவே மரித்தார்.

### IV பவுலின் இருதயம் நொறுங்குண்டது (அப். 9:1-20)

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையை மாற்றிய ஒரு பயணம். தமஸ்கு பயணம். பவுல் (பிலி. 3:5-8) தன் தகுதிகளையும் (அப். 7:58 - 8:3) நியாயப்பிரமாண வைராக்கியத்தையும் பார்க்கிறோம். தமஸ்குவிற்கு கூட கிறிஸ்தவர்களை சிறை பிடிக்கும்படி தான் சென்றார்.

ஆனால், தேவன் அவரை சிறை பிடித்தார். அப் 9:3 மூன்று நாள் புசியாமலும், குடியாமலும் பார்வை இல்லாமலும் இருந்தார். ஆண்டவரின் சத்தம் பவுலின் இருதயத்தை உடைத்தது. அப் 9:6 பவுல் நடுங்கித் திகைத்து வேத சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். (II தீமோ 4:8) சிறப்பாக ஓடி முடித்தார்.

### V நம்முடைய இருதயம் எப்படிப்பட்டது?

(எரேமியா 17:9-10) (சங். 139:23-24). (II தீமோ 3:16-17). (யோவா 14:6) நம் இருதயம் அநேக நேரங்களில் தேவனுக்கு ஆகாத இருதயமாய் போய் விடுகிறது. (மத். 15:19) இருதயத்தில் இருந்தே சகல பாவங்களும் உற்பத்தியாகிறது.


### வாசலை இடித்து உள்ளே செல்பவரா நாம்


நம் உயரத்தை விட குறைவான உயரமுள்ள ஒரு வீட்டிற்குள் பிரவேசிக்க நாம் தான் குனிந்து செல்ல வேண்டும். நமக்காக வாயில் இடிக்கப்படமாட்டாது. தேவனுடைய சத்தியமும் அப்படித்தான் (சங். 51:16-17). தேவன் விரும்பும் பலி நொறுங்குண்ட இருதயம் தான். நம் இருதயத்தை தேவன் ஆளுகை செய்யும்படி திறந்து கொடுப்போம். கிருபை உங்களை சூழ்வதாக.

**S. பிச்சைமுத்து, தூத்துக்குடி.**

# BIBLE MEDITATION

**TV PROGRAM**



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV திங்கள் காலை 7:00 மணி

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.